**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.77
https://ngmtamil.in/

# திருமூலர் வலியுறுத்தும் பண்டைய தமிழர் அரசாட்சி முறை

**செ.முருகதாஸ்**

முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,

தமிழாய்வுத்துறை, உலகநாத நாராயணசாமி அரசினர் கல்லூரி (தன்னாட்சி),

பொன்னேரி-601204. திருவள்ளூர் மாவட்டம்

**மின்னஞ்சல்**: smurugadoss@gmail.com, **Appl.No:24010195 Ph.D./Prov. Regn./24010195/FT/06/2024 Dated :01/10/2024**

**ஆய்வுச் சுருக்கம்**

The Tamil language is the oldest language in the world. The culture of the Tamils is an unique in the world. The Tamils are those who had the moral values such as philosophy, wisdom, truth, honesty, equality, brotherhood, virtue, and worship. The Siddhar's philosophy is an entirely differenced from the moral values. The lives of the eighteen Siddhar can be said to be proof of this. The Nayanmars were the ones who were immersed in devotion in Tamil Nadu. They are called sixty-three. One of them, Thirumoolar Siddhar, was the leading Sridhar other world and had palace for himself in the saiva religion. Till today, he is considered a Siva Gnani and is called Siddhar by the Tamil world. The Thirumanthiram, which is the tenth of the twelve Saiva Tirumurai, was composed by him. Through the Thirumanthiram, he taught many wisdoms, spiritual disciplines, and the Siddha way of life to the Tamil community. Amount the many philosophies he expounded, the Gnana Arasachii Murai, that means Gnana system of Government System is one of them. In this regard, the purpose of this article is to study Thirumoolar's Gnana Arasachii Murai- means Gnana system of Government System.

**கடவுச்சொற்கள்**

ஞானம், ஞானஅரசாட்சி, போலி வேடதாரி, அறநெறி, செங்கோல்

**முன்னுரை**

உலகின் தொன்மையான மொழி தமிழ்மொழி. தமிழரின் பண்பாடு உலகில் சிறந்தது. உலக மூத்த குடிகளுள் தமிழ்க்குடியும் ஒன்று. தத்துவம், ஞானம், உண்மை, நேர்மை, சமத்துவம்,

சகோத்தரத்துவம், அறம் போன்ற சீவ ஒழுக்க விழுமியங்களோடு கடவுள் வழிபாட்டினையும் கொண்டிருந்தவர்கள் தமிழர்கள். பதினெண் சித்தர்கள் என்போரின் வாழ்வியல் இதற்குச் சான்றாகக் கூறலாம். தமிழ்நாட்டில் பக்தியில் திளைத்தவர்கள் நாயன்மார்கள். அவர்களை அறுபத்து மூவர் என அழைப்பர். அவருள் ஒருவர் திருமூலர். சித்தர் உலகின் தலைமைச் சித்தராகவும், சைவ நெறியில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்தவராகவும் காணப்பட்டவர். இன்று வரையில் அவர் ஒரு சிவஞானியாகவே கருதுவதால் அவரைச் சித்தர் என அழைத்து மகிழ்கிறது தமிழ் உலகம். பன்னிரு சைவத்திருமுறைகளில் பத்தாம் திருமுறையாக விளங்கும் திருமந்திரம் இவரால் இயற்றப்பட்டதே. திருமந்திரத்தின் வாயிலாகப் பல ஞானங்களை, ஒழுக்கங்களை, சித்து வாழ்க்கை முறையினைத் தமிழ்ச் சமூகத்திற்குக் கற்றுக் கொடுத்துள்ளார். இவர் கூறிய எத்தனையோ தத்துவங்களில் ஞான அரசாட்சி முறையும் ஒன்று. அந்த வகையில் திருமூலர் வலியுறுத்தும் பண்டைய தமிழர் அரசாட்சி முறையைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**திருமூலர் - அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவர்**

தமிழர் என்றாலே சேர, சோழ, பாண்டியர்கள்தான் நினைவுக்கு வருகின்றனர். பொற்காலமாகக் கருதப்பட்ட சங்ககாலத்தில் இவர்களின் ஆட்சிமுறை சிறந்து விளங்கியது. எல்லோருக்குமான கல்வி, எல்லோருக்குமான உரிமை, எல்லோருக்குமான சமவாய்ப்பு இவைகள் எல்லாம் கிடைத்த அந்தச் சங்க காலத்தில் ஆட்சியும் நிருவாகமும் சிறப்புடன் நடைபெற்று வந்தது. அரசுமுறைஆட்சி என்றாலும், அரசர்களைக் கேள்வி கேட்கும் நிலையில் மக்கள் உரிமை பெற்றிருந்தனர். பொதுநலன் கருதி புலவர்கள் ஆட்சியாளைக் கண்டிக்கும் இடத்தில் இருந்தார்கள். அந்த வகையில் திருமூலரும் ஒருவர். இவர் ஒரு புலவர் அல்லர். என்றாலும் ஆன்மிகத்துறையில் சைவ நெறிமுறைகளைக் கடைபிடித்து, தான் வாழும் காலத்தல் சிறந்த ஒழுக்க நெறிமுறைகளைக் கொண்டு வாழ்ந்திருந்தார். இதனால் பிற்காலத்தில் திருமூலர் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராகப் போற்றப்பட்டார். இவர் வாழ்ந்த காலம் சுமார் கி.மு.3000 என்கின்றனர். இன்னும் சிலர் இவரின் காலம் சங்க காலத்தின் தொடக்க காலம் என்பர். இன்னும் சிலர் இவர் திருவள்ளுவர் சமகாலத்தவர் என்பர். இவ்வாறு திருமூலரின் காலத்தைப் பற்றிய கருத்துகள் பல்வேறு ஆயினும், இந்தத் தமிழ் மண்ணில்தான் பிறந்தார், வாழ்ந்தார், நல்ல நெறிமுறைகளைத் தமிழ்ச்சமூகத்திற்கு வழங்கிச்சென்றுள்ளார் என்ற முடிவுக்கு நாம் வரலாம்.

**திருமந்திரத்தில் அரசாட்சி முறை**

திருமூலரின் திருமந்திரம் மனிதனுடைய வாழ்க்கைக்குத் தேவையான பல நல்ல அறநெறிகளை இயல்புத் தன்மைகளோடு எடுத்துரைக்கின்றன. மேலும் இறைவனுடைய திருவருளைப் பெற்று வாழ, சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு நிலைகளை வழிமுறைகளாகக் கற்றுக் கொடுக்கிறது. திருமந்திரம் பாயிரம் மற்றும் ஒன்பது தந்திரங்களை உடைய நூல். மூவாயிரம் எனப் போற்றப்படும் இந்நூலின் முதல் தந்திரத்தில் மனித இயல்புகளைப் பற்றியே திருமூலர் பாடியுள்ளார்.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

முதல் தந்திரத்தின் ஏழாவது பகுதியாக அமைந்திருப்பது ‘அரசாட்சி முறை’ என்னும் பகுதியாகும். இப்பகுதியில் அமைந்த பாடல்கள் அனைத்தும் ஞான நிலையைப் பற்றிப் பேசுவதாக அமைந்துள்ளது. ஞானம் என்பது அனைத்தனையும் கடந்த நிலை எனக் கூறுவர்.

**அரசியலின் இரண்டு வகை**

அரசு என்பதற்கு, “ஆட்சி, அதிகாரம் பற்றிய கோட்பாடுகளும் நடைமுறைகளும் ஆகும்” எனத் தற்காலத் தமிழ் அகராதி விளக்கம் அளிக்கிறது. அரசியல் என்பது ஒரு நாடு சார்ந்தது. முன்பொரு காலத்தில் எழுதப்படாத சட்ட திட்டங்கள், வாழ்வியல் நடைமுறைகள், கூடிவாழும் போது மனிதர்கள் கடைபிடித்த நெறிகள் அனைத்தும், பிற்காலத்தில் மனிதன் தன் நாடு சார்ந்த நிலைக்கு ஏற்றவாறு எழுத்தறிவு பெற்ற நிலையில் அதனை ஒரு குழுவாக இருந்து எழுதிக்கொண்டான். அந்தக் கோட்பாடுகளின் நடைமுறைகளின் தொகுப்பே அரசியல் என ஆயிற்று எனக் க்ரியா என்னும் தற்காலத் தமிழ் அகராதி விளக்கம் அளிக்கிறது. இதன்வழியே மக்களையும், மக்கள் வாழும் நாட்டையும் நிர்வகிப்பது அல்லது ஆட்சி செய்வது அரசியல் எனப்பட்டது என்பதைப் புரிந்து கொள்ளலாம். பொதுவாக அரசியலை,

“1.அன்றன்று நிகழக்கூடிய நிகழ்வுகளோடு தொடர்புடைய நடைமுறை அரசியல் என்றும்,

2. எல்லா காலத்திற்கும் பொருந்தும் பொதுவான அரசியல் என்றும் என இரண்டாகப் பிரிக்கலாம்” எனக் கூறுகிறார் கி.வ.ஜெகந்தான். (கி.வா.ஜெகந்நாதன், ஆரம்ப அரசியல் நூல், பக்-5)

ஆகவே, அரசியல் என்பது பன்னெடுங்காலமாக மக்களால் பின்பற்றி நடந்துவந்த வாழ்வியல் ஒழுங்குமுறைகளைப் பின்பற்றுவது எனக் கொள்ளலாம். திருக்குறள் பொருட்பாலில் திருவள்ளுவர் கூறும் அரசியல் சார்ந்த அறக்கருத்துகளும், திருமந்திரத்தில் திருமூலர் முதல் தந்திரத்தில் ஏழாவது பகுதியில் கூறும் அரசியல் சார்ந்த அறக்கருத்துகளும் ஒற்றுமையுடன் இருப்பதையும் காணமுடிகிறது. மேலும் இவ்விரண்டும், அரசியல் சார்ந்த கருத்துக்களை ஒருமித்தக்கருத்துகளுடன் எடுத்துரைக்கும் பாங்குடன் காணப்படுகின்றன என்பது இங்குக் குறிப்பிடத்தகுந்தது. மேலே கூறப்பட்ட இரண்டு வகையான அரசியல் நிலைகளில், இரண்டாவது வகையான “எல்லா காலத்திற்கும் பொருந்தும் பொதுவான அரசியல் ” என்ற வகையைச் சார்ந்த அரசியல் கருத்துக்கள் அனைத்தும், திருமூலர் கூறும் அரசியல் சார்ந்த அறக்கருத்துகளோடு ஒன்றிப்போவதைக் காணமுடிகிறது.

**திருவள்ளுவரின் அரசியல் பார்வை**

மக்களை ஆளும் அரசு எப்படி இருக்க வேண்டும்?, அரசு எவ்வாறு செயல்பட வேண்டும்? என்பதைத் திருவள்ளுவர், “இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த, வகுத்தலும் வல்ல அரசு” - (திருக்குறள் -385) என்ற திருக்குறளின் வாயிலாகத் தெளிவு படுத்துகிறார். இதனைப்போலவே, ஓர் அரசு மக்களிடத்தில் எவ்வாறு மதிப்பளித்து நடந்துகொள்ள வேண்டும்? என்பதற்குப், “பசியில்லாமல், பிணியில்லாமல், அயல்நாட்டின் பகையில்லாமல் இருக்க வேண்டும்” என்ற திருக்குறளின் வாயிலாகச் சான்றாகக் கூறுகிறார். (திருக்குறள் -734) மேலும், சமுதாயத்திலுள்ள குடிமக்கள் வாழ்க்கை நலனைப் பெற செம்மையான நெறிகளை வகுத்து ஆட்சி புரிதல் வேண்டும்

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

என்கிறார். அதுவே அரசின் கடமையாகும் என்கிறார். மக்களின் இயல்பையும், தேவைகளையும் உணர்ந்து செயல்படும் செங்கோன்மையாக, அறம் தவறாது, அல்லவை நீக்கி சமுதாயத்தினை மேன்மையுறச் செய்தல் வேண்டும்” (திருக்குறள் -384), எனவும் உணர்த்துகிறார். எனவே, திருவள்ளுவர் கூறும் அரசியல் நிலை என்பது, “அரசனுக்குக் கடமையைச் செய்யும் செயல் நிலையும், நன்மையை ஆற்றும் துணிவும், நாட்டின் மீதான கவனிப்பும், மக்கள் நலனும் தேவை” என்பதேயாகும். இந்தக் கருத்தியலோடு திருமூலரின் அரசியல் சிந்தனைகள் மிக நெருக்கமாக ஒன்றிப்போதைப் பார்க்க முடிகிறது.

**திருமூலரின் அரசியல் பார்வை**

திருமூலர், திருவள்ளுவர் குறிப்பிடும் அரசியல் பார்வையிலிருந்து சற்றே மாறுபட்டு, அரசியலை ஞானமாகப் பார்க்கிறார். அரசன் ஆற்ற வேண்டிய பணிகள் அல்லது அரசனின் கடமைகள் இதுஇதுவெனப் பட்டியலிட்டுக் காட்டுகிறார். திருமூலர் பாடிய திருமந்திரத்தில், முதலாம் தந்திரம் எனப்படும் பகுதியில் இதனை எடுத்துரைக்கிறார். அரசனின் கடமைகள் என்பது, “அரசனுக்கே இருக்க வேண்டிய தனி மனித ஒழுக்கம், அதனைப் பேணுதல் என்பது அரசனின் தலையாயத் தனிமனித ஒழுக்கம்.” என்பது ஒருவகை. “அரசன் குடிகளைப் பாதுகாக்கின்ற தன்மை, அதாவது மக்களைக் காக்கின்ற தன்மை” என்பது இரண்டாவது வகை எனக் கூறுகிறார். இதிலிருந்து திருமூலர் கூறும் அரசியல் என்பது அரசன் சார்ந்த்தாக அதவாது ஆளுநர் என்பவரைச் சார்ந்த்தாக இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளலாம். ஆகவே திருமூலர் அரசன், என்பவன் மெய்ஞானம் படைத்தவனாக இருக்க வேண்டும் என வலியுறுத்துவதைப் பார்க்க முடிகிறது.

கி.வா.ஜகந்நாதன், தன்னுடைய “ஆரம்ப அரசியல் நூல்” என்ற நூலில் (பக்கம்-3) “அரசியல் நூல் என்பது அரசைப் பற்றியும், அரசாங்கத்தைப் பற்றியும் சொல்லுவது” எனக் கூறும் நிலையோடு திருமூலரின் அரசன் பற்றிய கருத்தியலை ஒப்பிடலாம். அரசியல் என்பது மக்களின் கூட்டு வாழ்க்கைக்கு ஏற்ற நடைமுறைகளை விளக்கும் சட்ட திட்ட நெறிமுறைகள் அல்லது ஒழுக்க நெறிகளைக் கொண்ட தொகுதி நூல். எழுத்துவடிவில் இருந்தால் அதனை அரசியல் சாசனம் என்றும்கூட கூறலாம் என்கிறார் கி.வ.ஜெகந்நாதன்.

ஆகவே, ஒரு நாட்டின் உற்பத்தி, வளர்ச்சி, மக்களின் உழைப்பு, பங்களிப்பு, பாதுகாப்பு பற்றிய வரலாறு எனக் குறிப்பிடும் தற்கால அரசியல் சார்பாக இல்லாமல் திருமூலர் அரசியலை ஞானமாகப் பார்க்கிறார். இக்கருத்தினை மையமாகக்கொண்டு திருமூலர், அரசனின் மானுடப் பண்பையும், ஆட்சிமுறைமை பற்றியும் திருமந்திரத்தில் பதிவு செய்து காட்டுகிறார். இப்பகுதியில் அரசன் ஆற்ற வேண்டிய கடமைகளை வலியுறுத்துக் கூறுவதாகப் பாடல்களி அமைந்திருப்பதைக் காணலாம். அரசன் ஆற்ற வேண்டிய, செய்ய வேண்டிய கடமைகளைப் பணிகளை ஏழாவது பகுதியில் முதல் தந்திரத்தில் பாடுவதை இதற்குச் சான்றாகக் கூறலாம். இப்பகுதியில் அரசனுக்குரிய

சில தகுதிகள் மற்றும் கடமைகளை அறிவுரையாக எடுத்துரைத்துப்பதைக் காணமுடிகிறது. இவற்றையே மெய்ஞானம் என்கிறார்.

**திருமூலர் குறிப்பிடும் அரசனின் தகுதி - கல்வி**

கல்விதான் அசரனுக்குச் சிறந்த ஆயுதம் என்கிறார். "ஓர் அரசன் கல்வியில் சிறந்தவனாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் உள்ளம் ஒளிபெறும்; அவன் எண்ணங்கள் ஒளிபெறும். இதன்மூலம், அவன் மேற்கொள்ளும் செயல்களால் நாட்டிற்கு நலம் உண்டாகும் என்கிறார்". இவ்வாறு அரசனின் தகுதி பற்றிப் பேசும் திருமூலரின் அறிவுரையை ஒரு ஞான நிலை எனக் கூறலாம்.

" கல்லா அரசனுங் காலனும் நேரொப்பர்
கல்லா அரசனிற் காலன் மிகநல்லன்
கல்லா அரசன் அறம்-ஓரான் கொல்லென்பான்
நல்லாரைக் காலன் நணுகநில் லானே" **(திருமந்திரம் -95)** என்று குறிப்பிடுகிறார்.

அதாவது, நேரடியாக அரசன் கல்வியில் சிறந்திருக்க வேண்டும் என்று சொல்லவில்லை. மறைமுகமாக, அரசன் கல்லாமல் இருந்தால் தீங்கு உண்டாகும் என்று சொல்கிறார். "காலனும், கல்லாத அரசனும் சமமானவர்கள்" என்று கூறுவதைக் காணலாம். "கல்லாத அரசனைக் காட்டிலும் காலன் மிகவும் நல்லவன்" என்று ஒன்றிலிருந்து மற்றொன்று மிகச் சரி என்பதாக உருவகப்படுத்தும் வேற்றுமையணியாகப் பார்க்க முடிகிறது. ஒன்றுக்கொன்று முரண்பாடு உள்ளதாகத் தோன்றினாலும், அதற்கான காரணத்தையும் தொடர்ந்து அடுத்ததாக விளக்குகிறார். திருவள்ளுவரும் "ஒருவனுக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே" "மண், பொன் ஆகியவையெல்லாம் செல்வங்களல்ல" எனக் கூறும் நிலையோடு ஒப்பிட்டும் பார்க்கலாம். (திருக்குறள்-400)

காலன் அதாவது எமன், மனம் போனபடி யாரையும் கொல்வதில்லை. யாருடைய விதி முடிகிறதோ அவருடைய உயிரை மட்டுமே எடுத்துச் செல்லக் கூடியவனாக யமன் இருக்கிறான். அவன் நல்லவர்களை அணுக மாட்டான். ஆனால், கல்லாத அரசன், செங்கோன்மையை விடுத்துக் கொடுங்கோலனாக மாறிவிடுவான் என்கிறார். கல்லாத அரசன் அவனுக்குப் புரிய அறிவால் அனைவரையும் துன்புறுத்துவான். ஆதலால், அவன் "காலனை விடக் கொடியவன்" என்ற கருத்தைப் பதிவு செய்கிறார்.

திருவள்ளுவரும் 'கல்வி' என்னும் அதிகாரத்தை அரசியலில் வைத்துள்ளமை இங்கு ஒப்புநோக்கத்தக்கது. இதனைத் "தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்- கற்றனைத் தூறும் அறிவு" (திருக்குறள் -396) என்னும் திருக்குறளின் வழி அறியலாம். இது எடுத்துக்காட்டு உவமையணியில் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தகுந்தது.

**அரசனின் மிக முக்கிய கடமை**

அரசனுடைய கடமைகளில் மிகவும் முக்கியமானதாகத் திருமூலர் இரண்டனைக் குறிப்பிடுகிறார். ஒன்று "மக்கள் கடவுளை மறவாமல் வாழும்படி வேண்டியவற்றைச் செய்வது". மற்றொன்று, "நாட்டில்

தவ முனிவர்கள் ஒரு குறையும் இல்லாமல் வாழ வகை செய்வது" என்கிறார். உலக மக்கள் நலன் பெற, நாட்டில் தவநெறி வளர வேண்டும் என்கிறார். அவ்வாறு வளர மன்னன் என்பவன் அரணாக இருக்க வேண்டும் என்கிறார். அதே சமயத்தில், உண்மையான தவம் உடையவர்கள் இன்னார் என்பதை இனங்கண்டு மன்னன், மக்கள் பயன்பெறச் செய்வது அவசியம் எனக் கூறுகிறார்.

"நாள்தோறும் மன்னவன் நாட்டில் தவநெறி
நாள்தோறும் நாடி யவன்நெறி நாடானேல்
நாள்தோறும் நாடு கெடுமூட நண்ணுமால்
நாள்தோறும் செல்வம் நரபதி குன்றுமே" **(திருமந்திரம்-96)**

என்று அரசனின் செல்வம் குறைவதற்கான காரணத்தையும் குறிப்பிடுகிறார். "அரசனின் குடைநிழல் மக்களுக்குக் குளிர்ச்சி உடையதாய் இருக்க வேண்டும்" **(நற்றிணை -146)** எனச் சங்க இலக்கிய நூலாகிய நற்றிணையும் இக்கருத்தினை முன்மொழிவதைக் காணலாம்.

**போலி வேடதாரிகளின் வேடத்தைப் பழிப்பது முறையல்ல**

தவ வேடம் பூண்ட வேடதாரிகள் ஒழுக்கத்தில் சிறந்து வாழாமல், தீய வழியில் நடந்துகொண்டால், அத்தகைய போலிகளைக் கண்டு உண்மையான தவவேடத்தை பலர் பழிக்கிறார்கள். இது முற்றிலும் தவறான அணுகுமுறை என்கிறார் திருமூலர். வேடம் நல்லவர்களை அடையாளங் காட்டவும், தன்னை ஏற்றவர்களுக்குரிய கடமைகளை நிலைநிறுத்தவும் உதவுவது என்கிறார். அரசன் இத்தகைய போலி வேடதாரிகளை இனம் கண்டு திருத்தி நல்ல தவயோகிகளாக மாற்ற வேண்டும் என அறிவுறுத்துகிறார். இந்த அறிவுரையே திருமூலரின் ஞானஅறிவுரை எனக் கூறலாம்.

"வேடநெறி நில்லார் வேடம்பூண் டென்பயன்
வேடநெறி நிற்போர் வேடம்மெய் வேடமே
வேடநெறி நில்லார் தம்மை விறல்வேந்தன்
வேடநெறி செய்தால் வீடது வாகுமே" **(திருமந்திரம் - 97)**

என்னும் பாடலில் இக்கருத்தினைப் பதிவு செய்திருப்பதைக் காணலாம். சேரமான் பெருமாள் நாயனார் உவர் மண்ணால் நனைந்து போய் நின்ற வண்ணான் ஒருவனைப் பார்த்து 'சிவனடியாரோ?' என்று வணங்கிய வரலாற்றினை இவ்விடத்து ஒப்பு நோக்கத்தக்கது.

**அரசன் காக்க வேண்டிய அறநெறிகள்**

மன்னன் என்போன், மக்களைக்காட்டிலும் மேம்பட்டு, அவர்களை வழி நடத்துக்கூயதாக இருக்கும் நிலையே 'அரசு' என்பர். பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை, மருதனிள நாகனார், "வேந்து மேம்பட்ட பூந்தார் மாறனே, கடுஞ்சினத்துக் கொள்களிறும், கதழ் பரிய கலி மாவும், நெடுங்கொடிய நிமிர் தேரும், நெஞ்சுடைய புகழ் மறவரும் என நான்குடன் மாண்டது ஆயினும், அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" எனப் புறநானூற்றுப் பாடலில் குறிப்பிடுகிறார். அதாவது யானை, குதிரை, தேர், காலாட்படை ஆகிய நால்வகைப் படைகளுடன் அரசு

சிறப்புடையதாக இருந்தாலும்கூட, அந்த அரசன் தன்னுடைய ஆட்சியில் பின்பற்ற வேண்டிய அறநெறியால்தான் அவனின் ஆட்சிச் சிறப்புறும் என்பதை இதன் மூலம் வலியுறுத்துகிறார். (புறநானூறு-55)

இந்தப் புறநானூற்றுப் பாடல் கூறுவதைப்போலவே, அத்தகைய அரிய அறநெறிகளை உள்ளடக்கியதாக அரசனின் அறநெறி இருக்க வேண்டும் எனத் திருமூலர் ஒன்றன் பின் ஒன்றாக இவ்வதிகாரத்தில் பட்டியலிடுகிறார்.

1. பசுக்களைப் பாதுகாக்க வேண்டும்

2. மகளிரைக் காப்பாற்ற வேண்டும்.

3. அறவோர்க்குத் தீங்கு வராமல் அரண் செய்ய வேண்டும்.

4. சிவ வேடம் உடையவர்களைப் பேண வேண்டும்.

காரணம் சிவ வேடம் கொண்டவர்களை தேவர்களும் போற்றுவார்கள் என்பதால், அத்தகையவர்களையும் மன்னவன் காக்க வேண்டும். ஒரு வேளை, இவர்களைப் பாதுகாக்காமல் விட்டால், அரசனுக்குத் துன்பம் ஏற்படும் என்கிறார். "ஆவையும் பாவையும் மற்ற வோரையும்
தேவர்கள் போற்றும் திருவேடத்தாரையும்
காவலன் காப்பவன் காவா தொழிவனேல்
மேவும் மறுமைக்கு மீளா நரகமே" (திருமந்திரம் -243) என்ற இந்தப் பாடலில் இதனைக் காணலாம்.

**செங்கோல் மாறாத அரசன்**

ஒரு நாட்டை ஆளும் அரசன் மக்களைக் காப்பாற்றும் கடப்பாடு உடையவனாக இருக்க வேண்டும்.

"அரசனது செங்கோல் தவறுமாயின் குடிமக்கள் பழிதூற்றுவர்" (புறநானூறு -72) ஏனெனில், குடிமக்களைப் பாதுகாப்பாகக் காக்க வேண்டியது அரசின் தலையாய கடமை ஆகும். மன்னன் மனம் போன போக்கில் நடவாமல், தன் வாழ்வைக் கருதி ஆட்சி புரியாமல், சிந்தை முழுதும் குடிமக்களின் நலன் கருதியும், நாட்டின் பாதுகாப்புக் கருதியும் ஆட்சியை மேற்கொள்வதே நலம் பயனைத் தரும் எனப் புறநானூறுக் கூறுவதைப்போல, திருமூலரும் மன்னன் மக்களைக் காக்க வேண்டும். யோகிகள் தன் மனத்தைக் காக்க வேண்டும் என்கிறார். இதனுள் மன்னன் யோகியாகவும், மக்கள் மனமாகவும் திருமூலர் உருவப்படுத்தியிருப்பதைக் காணமுடிகிறது. அப்படியானால், காற்றை அடக்கி மூலக்கனலை மேலே ஏற்றி, ஆதாரங்கள் ஆறையும் கடந்து, அமுதப் பாலை உண்ணக் கூடியவர்களே 'யோகியர்கள்' என அடையாளப்படுத்தும் திருமூலர் போலிகளைப் பற்றிக் கூறாமல் விடவில்லை.

யோகியர்களைப் போல் அமுதுண்டு மகிழ்ந்திராமல், மரத்திலிருந்து இறக்கும் 'பாலை' (கள்) உண்ணக் கூடிய போலியான வாழ்க்கையை வாழ்பவர்களைத் திருமூலர் கண்டிக்கிறார். அதுமட்டுமின்றிக் கள்ளுண்ணும் கயவர்களைத் தண்டித்தல் வேந்தனுக்குரிய கடமை எனக் குறிப்பிடுகிறார். இந்தப் பகுதியில் திருமூலர் முழுக்க முழுக்க வேந்தனின் கடமைகளாக உரைப்பது மன்னன் ஆட்சி முறைதான். என்றாலும், இவற்றோடே ஞானிகள் தன் உடலை, மனதை அடக்கி ஆட்சி நடத்தும் விதத்தையும் ஒப்புமைப் படுத்தி உரைப்பதைக் காணமுடிகிறது.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி) 

“கள்ளின் மேல் ஆசை கொண்ட அரசர்கள், எக்காலத்திலும் பகைவரால் அஞ்சப்படுவர், தம் முன்னோரால் அடைந்திருந்த புகழ் என்னும் ஒளியையும் இழந்து விடுவார்கள் எனத் திருமூலர் கள்ளுண்ணுதலைத் தடுப்பது என்பது அரசன் தன் மக்களுக்கு ஆற்றும் கடமை என்கிறார்.

“கால்கொண்டு கட்டிக் கனல்கொண்டு மேலேற்றிப்
பால்கொண்டு சோமன் முகம்பற்றி உண்ணாதோர்
மால்கொண்டு தேறலை உண்ணும் மருளரை
மேல்கொண்டு தண்டஞ் வேந்தன் கடனே” என்னும் திருமந்திரப்பாடல் 246-வது பாடலில் அறியலாம். திருவள்ளுவரும், ‘கள்ளுண்ணாமை’ என்பதைத் தனிமனிதனுடைய ஒழுக்கத்தை வரையறுக்கும் அறத்துப் பாலில் வைக்காமல், அரசனால் நிகழும் ஆட்சி முறையைச் சொல்லும் பொருட்பாலில் வைத்துள்ளதை காணலாம். திருவள்ளுர் கூறும் காரணக் காரியங்களோடு, திருமூலரின் சிந்தனைகள் ஒன்றுபோலத் தோன்றுவதை இதனுள் பார்க்க முடிகிறது. இவ்விருவரின் பார்வையிலுமே கள்ளுண்ணுதல் என்பது, தவறு, கண்டிக்கத்தக்கது என்பதையும் உணரலாம். இத்தகைய அறிவுரையை எடுத்துரைப்பதால் திருக்குறள் எவ்வாறு நீதி நூல் எனப் போற்றப்படுகிறதோ?, அவ்வாறே, தனிமனிதனின் ஒழுக்கத்தைக் குறிக்கும் திருமந்திரமும் நீதி எனக் கூறலாம்.

இதன்மூலம் திருமூலர் கூறும் அரசாட்சி நெறிமுறைகளைக் கீழ்க்காணும்படி பட்டியலிட்டுக் கூறலாம்.

1. கல்வி இல்லாத அரசன் எமனுக்குச் சமம்.

2. கல்விஅறிவில்லாத அரசனை விட எமன் சிறந்தவன்

3. அரசன் தன் நாட்டில் தவ வழியில் வாழ்பவர்களுக்குத் துன்பம் நேரா வண்ணம் காக்க வேண்டும்.

4. அரனுக்கென்று விதிக்கப்பட்ட நெறியில் நடக்க வேண்டும்.

5. அரசன் என்பவன், வேடமிட்டு யோகிகள் போல் நடிப்பவர்களைக் கண்டுபிடித்து, அவர்களை அகற்ற வேண்டும்.

6. பூணூல் அணிந்தவர்கள் அறியாமையை அகற்றாமல், உண்மை ஞானம் பெறமால் இருந்தால் அரசனுக்கு அவர்களால் எந்த ஒரு பெருமையும் புகழும் இல்லை.

7. பசுக்களையும், பெண்களையும், ஞானிகளையும் அரசன் காக்க வேண்டும்.

8. அரசன் ஒருபோதும் தீய செயல்களைச் செய்யக் கூடாது.

9. புலி பதுங்கிக்கொண்டு தாக்குவதைப் போல, எதிரிகளிடமிருந்து தனது நாட்டை, மக்களைக் காக்க வேண்டும்.

10..இறைவனைப் போல அரசன் தண்டனை கொடுத்துக் குற்றங்களைக் குறைக்க வேண்டும்.

மேற்காணும் இப்பத்துக்கட்டளையின் வழியே, ஓர் அரசன் நல்லாட்சியை எவ்வாறு வழங்க வேண்டும் என்பதான அறிவுரையாக இதனைக் கொள்ளலாம். ஒரு நாட்டில் வாழும் மக்களுக்கு

எவ்வகையால் துன்பம் ஏற்படினும், அதனை நீக்கி மக்களைக் காப்பதே அரசனின் கடமை என உரைப்பது திமூலரின் ஆட்சிமுறை பற்றிய ஞானத்தைக் காட்டுகிறது என்பது இதன்மூலம் நிறுவலாம். 'நாட்டின் நலம்' என்ற நல்வழிச் செல்லும் இலட்சியத் தலைவனாக ஒவ்வொரு அரசனும் ஆட்சி புரிய வேண்டும் என்பதே திருமூலரின் தீர்க்கமான சிந்தனையாகும். "கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும், உடையனாம் வேந்தர்க் கொளி" (திருக்குறள் -390) எனத் திருக்குறள் கூறுவதற்கேற்ப அரசன் தீயவர்களைத் திருத்தி, அவர்களால் மற்றவர்களுக்குத் தீங்கு வராமல் காப்பாற்றும் செயலை அரசன் செய்ய வேண்டும் என்ற திருமூலரின் கருத்தியலோடு ஒத்துப் போவதைக் காணலாம். இவற்றோடு பக்தி, ஞானம், அறம் ஆகிய ஞானங்களும் மன்னனுக்குத் தேவை என்கிறார். "பயிருக்கு வேலி போல, மக்களுக்கு வேலியாக நிற்பவன் அரசன்" என்பதே திருமூலர் கூறும் மன்னன் என்பதற்கான அடையாளங்களாகும் எனலாம்.

**தொகுப்புரை**

அரசனுக்கே அறிவுரை கூறும் திருமூலரை ஞானத்தின் வடிவாகக் காணச்செய்கிறது இக்கட்டுரை. பக்தி நெறியில் ஈடுபடுவர்கள் இறைவனைத் துதிப்பதோடு நின்று விடுவர். ஆனால் திருமூலரோ, மக்களுக்கு மட்டுமன்றி அரசனுக்கும் அறிவுரை கூறும் ஞானியாக வாழ்ந்திருந்தார் என்பது இதன் மூலம் அறிய முடிகிறது. சித்தர்கள் என்போர் இறைவனை மறுப்பவர்கள் அல்லர். இறைவனின் பெயரால் ஏமாற்றும் போலிகளைச் சாடுபவர்கள். சித்தர்களின் சிந்தனை என்பது, நாடும், மக்களும் நன்றாக இருக்க வேண்டும் என்பதே. பக்தியால் மட்டுமே மனிதன் முழுமை அடைய முடியாது. பக்தியுடன் நல் ஒழுக்கமும், சிந்தனைகளும் இருக்க வேண்டும் என வலியுறுத்தும் சித்தர்களைக் காட்டிலும், திருமூலர் ஒருபடி மேலே சென்று அரசனுக்கும் அறிவுரை கூறும் ஒரு ஞானியாகவே திகழ்கிறார்.

**துணைநின்ற நூல்கள்**

[1.] இராமநாத பிள்ளை, ப. (வி.ஆ), சிதம்பரனார், அ.(கு.ஆ), திருமூலரின் திருமந்திரம் மூவாயிரம்,
[2.] தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை -18. (1942)
2. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை உரை, புறநானூறு (இருபகுதிகள்), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
[3.] சென்னை - 18. (1956)
3. திருவள்ளுவர், திருக்குறள் (திரு.மு.வரதராசனார் (தெளிவுரை), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை -18.
[4.] (2004)
4. பின்னத்தூர் அ. நாராயணசாமி அய்யர் உரை, பொ.வே சோமசுந்தரனார் இலக்கணக் குறிப்பு ஆய்வுரை,
[5.] சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை (1962)
[6.] கி.வா.ஜெகந்நாதன், ஆரம்ப அரசியல் நூல், சென்னைப் புத்தகாலயப் பிரச்சார சங்கம் (1943)